1986 நவம்பர் 17]

இரட்டை மங்களம் ஆதி திராவிட நல நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

43—(*வினா எண். 3762) திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரட்டைமங்களம் கிராமத்தில் உள்ள ஆதி திராவிட நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டைமங்களம் கிராமத்தில் உள்ள நடு நிலைப் பள்ளியும், அதைச் சுற்றியுள்ள கிராமக் குடியிருப்புகள் அடங்கியுள்ள கிராமங்கள் அனைத்தும் ஆதிதிராவிடர்கள் வசிக் கின்ற பகுதிகளாக இருக்கின்றன. மேலும் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துருக் களை எல்லாம் அரசுக்கு அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது. அதற்குண்டான அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன. விரை வில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. வருகின்ற ஆண்டிலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

தஞ்சை மாவட்டம் கடமங்குடி கிராமத்தில் ''தாட்கோ'' மூலம் வீடுகள்.

44—(*வினா எண். 7953) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம், கடமங்குடி என்ற கிராமத்தில் ''தாட்கோ'' நிறுவனம் மூலம் வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அரசு, ஆதி திராவிடர்கள் கண்ணீர் துடைக்கும் நோக் கத்தோடு, ஆதி திராவிடர்க்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவுபோட்டு இருக்கின்றார்கள். ஆனாலும்கூட அந்த ஊராட்சி ஒன்றியங்களிலே, அந்த ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்களும் ஊராட்சித் தலைவர்களும் தங்களைச் சார்ந்துள்ள இயக்கத்திலே சேர்ந்தால்தான் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்ற நிலமைகள் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதைத்தடுக்க ''தாட்கோ'' மூலமாக கட்டிக் கொடுக்கும் திட்டம் அல்லது கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 'தாட்கோ' மூலம் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தின் வாயிலாகத்தான், என்னுடைய துறையைப் பொறுத்தவரையில், கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கு சொல்கிறேன். ஆர். எல். ஈ. ஜி. பி., என். ஆர். ஈ. பி. ஆகிய திட்டங்கள் வாயிலாக உள்ளாட்சித் துறையின் மூலமும் அதுபோல் கூட்டுறவுத் துறையைப் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்—அது போலவே வீட்டுவசதித் துறையின் வாயிலாக வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டமும் நடந்துகொண்டிருக்கின்றது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே தாட்கோ திட்டத்தின் மூலமாக எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வருகின்ற ஆண்டில் இன்னும் எத்தனை வீடுகள் அந்தப் பகுதியிலே கட்டப்படும் என்பதைப் பற்றி முடிவு செய்யவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்

திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, எம். ஜி. ஆர். அரசு ஆதி திராவிடர்களுக்கு என்று வீடுகள் கட்டிக்கொடுப்பதும், பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக்கொடுப்பதும் என்று சொல்லி பல நல்ல திட்டங்களை அறிவித்தார்கள். அது பற்றி என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னாள் தொகுதியான அனகாபுத்தூர் பகுதியில் ஒரு உயர்நிலைப் பள்ளி கட்டப்பட்டு அது கவனிப்பாரற்று அப்படியே இருக்கின்றது. அதை உடனடியாகத் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எப்போது தேதி கேட்டாலும் கொடுத்து அரசு அந்தப் பள்ளியைத் திறக்கக் கடமைப்பட்டிருக் கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக் கின்றார்கள். வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் இருக்கின்றது. அவர்கள் மூலம் பணத்தை ஒதுக்கி இப்போது வேலைகள் நடந்துவருகின்றன. ஆனால் அரசாங்கமே ஒரு தொகுதிக்கு இவ்வளவு வீடுகள் என்று நேரடியாக ஒதுக்கினால் இந்தக் குறைபாடுகள் இல்லாமல் இருக்குமே, அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கோ. வீரய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தாட்கோ'' மூலமும், என்.ஆர்.இ.பி. மூலமும் ஆர்.எல்.இ.ஜி.பி. மூலமும் வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒன்றியங்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் தீர்மானிக்கும் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புவதோடு இப்போது வீடுகள் கட்ட 6 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இத்தொகையைக் கொண்டு கட்டிடங்கள் கட்ட முடியவில்லையாதலால் இத்தொகை உயர்த் தப்படுமா? மேலும் இத்திட்டத்தை நகரப் பஞ்சாயத்துக் களுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் இருக்கைகளில் அமரவேண்டுமென்றும் அமைச் சர்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தவைர் அவர்களே, இந்த ஆண்டு என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்களின் மூலமாக கிட்டத்தட்ட 47 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு பகுதிக்கும் விஸ்தரித்து நடக்கவிருக்கின்ற திட்டம் இது. அதைப் போலவே தாட்கோ மூலமாக 5 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டமும் இருக்கிறது. உறுப்பினர் இங்கே சொன்னதைப்போல 6 ஆயிரத்தை 10 ஆயிரமாக உயர்த்துகின்ற செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.